# 7 நாட்டார் பாடல்கள்

கிராமப்புற மக்களின் வாழ்வியல் அம்சங்கள் பழக்கவழக்கங்கள், பண்பாடுகள், நம்பிக்கைகள், தொழில் முயற்சிகள் என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு அவர்களது உள்ளத்திலிருந்து இயல்பாகவே ஊற்றெடுக்கும் பாடல்களே நாட்டார் பாடல்களாகும். இப்பாடல்கள் கற்றோர், கல்லாதோர் என்ற வேறுபாடின்றி நாட்டுப்புற மக்களால் இயல்பாகவே பாடப்படுபவை. இப்பாடல்கள் நாடோடிப் பாடல்கள், கிராமியப் பாடல்கள், வாய்மொழிப்பாடல்கள் எனவும் குறிப்பிடப்படுவதுண்டு. மனிதரின் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள நிகழ்வுகள் இப்பாடல்களின் பொருள்களாக அமைந்திருப்பதைக் காணலாம். இப்பாடல்களுக்கு எந்தவொரு தனிநபரும் சொந்தம் கொண்டாடியதில்லை.

பிரதேசத்திற்குப் பிரதேசம் அவரவர் தொழில் முறைகளுக்கு ஏற்ப இப்பாடல்கள் வேறுபடும். வயல் மற்றும் வயல் சார்ந்த இடங்களில் வாழ்வோர் நீர் இறைக்கும்போதும், நாற்று நடும்போதும், அரிவி வெட்டும் போதும், வயல் வேலை செய்யும்போதும் களைப்பை மறந்து செயற்பட பாடிக்கொண்டே வேலை செய்வார்கள். அவ்வாறே கடலுக்கு மீன் பிடிக்கச்செல்லும் மீனவர்கள் வலை இழுக்கும்போதும் மற்றும் பல சந்தர்ப்பங்களிலும் பாடிக்கொண்டு வேலை செய்வார்கள். தலைவன் - தலைவி ஆகியோரின் காதல் வாழ்விலும் தம் உணர்வுகளை வெளிப்படுத்தல், செய்தி பரிமாறல் போன்ற சந்தர்ப்பங்களிலும் இப்பாடல்களைப் பாடுவார்கள். இவ்வாறான தொழில் சார்ந்த, காதல் வாழ்வு சார்ந்த பாடல்களில் சிலவற்றை நாம் இங்கு நோக்குவோம்.

## ஏர்ப்பாடல்

**இது வயல் உழும்போது பாடப்படுவது**



பட்டி பெருகவேணும் தம்பிரானே
பாற்பானை பொங்கவேணும் தம்பிரானே
மேழி பெருகவேணும் தம்பிரானே
நாடு தழைக்கவேணும் தம்பிரானே
நல்ல மழை பெய்யவேணும் தம்பிரானே
ஏர் தழைக்கவேணும் தம்பிரானே
எல்லோரும் வாழவேணும் தம்பிரானே

**பிரதேச வழக்குச் சொற்கள்**

பட்டி - மாடுகள் சேர்ந்த தொகுதி
மேழி - செல்வம்
தம்பிரான் - சிவபெருமான்

## அரிவி வெட்டும் பாடல்



ஆற்றோடு ஆற்றுநீர் அலைந்து வருமாப்போல்
அதன்பிறகே புள்ளுத் தொடர்ந்து வருமாப்போல்
சேற்றோடு வெள்ளம் தெளிந்து வருமாப்போல்
செங்கால் நாரையினம் மேய்ந்து வருமாப்போல்
சினந்தரிவி வெட்டும் இளந்தாரி மாரை
கண்ணூறு படாமற் காரும் ஐயனாரே

மட்டுருக் காலை அருவாளு மடித்து
மாவிலங்கன் பிடி சீவி யிறுக்கி
வெட்டும் பிடியைச் சிறக்கவே போட்டு
வெள்ளித் தகட்டினால் விரல்கட்டமிட்டு
வளர்ந்தரிவி வெட்டும் இளந்தாரிமாரை
நாவூறு வராமற் காரும் ஐயனாரே

- அரும்பதங்கள்

இளந்தாரி - வாலிபன்
கண்ணூறு - கண் படல்
மட்டுருக்கு - உருக்கு (இரும்பின் ஒருவகை)
மாவிலங்கம் - ஒருவகை மரம்
விரல் கட்டம் - பிடியுடன் அரிவாளை பொருத்தும் இடம்

## மீனவர் பாடல்

### இது கடலில் மீன் பிடிக்கும்போது பாடப்படுவது



ஏலேலோ - ஐலசா

வானமுட்ட ஏலேலோ, நிற்கிறானே ஐலசா
ஓடி ஓடி ஏலேலோ, இழுக்கவேணும் ஐலசா
மண்ண நம்பி ஏலேலோ, மரமிருக்க ஐலசா
மரத்த நம்பி ஏலேலோ, கிளையிருக்க ஐலசா
கிளைய நம்பி ஏலேலோ, இலையிருக்க ஐலசா

இலைய நம்பி ஏலேலோ, பூவிருக்க ஐலசா
பூவநம்பி ஏலேலோ, பிஞ்சிருக்க ஐலசா

பிஞ்சை நம்பி ஏலேலோ, காயிருக்க ஐலசா
காய நம்பி ஏலேலோ, பழமிருக்க ஐலசா
பழத்த நம்பி ஏலேலோ, நானிருக்கேன் ஐலசா
உன்ன நம்பி ஏலேலோ, நானிருக்கேன் ஐலசா
உச்சி வெயிலில் ஏலேலோ, உருகிறேனே ஐலசா
உள்ளம் மட்டும் ஏலேலோ, உன்னிடமே ஐலசா

## காதல் பாடல்

ஆசைக்கிளியே என்ர ஆசியத்து உம்மாவே
ஓசைக் குரல்லே - உங்க உம்மாவைக் கூப்பிடுங்க

கடலே இரையாதே காற்றே நீ வீசாதே
நிலவே எறியாதே - என்ர நீல வண்டுபோய்ச் சேருமட்டும்

மாமி மகளே என்ர மருதங்கிளி வங்கிசமே
ஏலங்கிராம்பே உன்னை என்ன சொல்லிக் கூப்பிடட்டும்

கைவிடுவேன் என்று எண்ணிக் கவலைப்படாதே கண்ணார்
அல்லாமேல் ஆணை - உன்னை அடையாட்டி காட்டுப் பள்ளி

சீனத்துச் செப்பே - என்ர சிங்காரப் பூநிலவே
வானத்தைப் பார்த்து - மச்சி வாடுவது என்னத்திற்கோ?

ஓதிப் படிச்சி ஊர் புகழ வாழ்ந்தாலும்
ஏழைக்குச் செய் தீங்கை - அல்லா எள்ளளவும் ஏற்க மாட்டான்

காவற் பரணிற் கண்ணுறங்கும் வேளையிலே
கண்ணான மச்சி வந்தென் காலூன்றக் கண்டேனே

காசி தரட்டோ மச்சி - கதைத்திருக்க நான் வரட்டோ
தூதுவரக் காட்டிடட்டோ - இப்போ சொல் கிளியே உன் சம்மதத்தை

- *அரும்பதங்கள்*

| | |
|---|---|
| *ஆசியத்து உம்மா* | *- ஒருவருடைய பெயர் (பெண்)* |
| *வங்கிசம்* | *- குடும்பம்* |
| *அல்லாமேல்* | *- இறைவன் மேல்* |
| *ஆணை* | *- சத்தியம்* |
| *காட்டுப்பள்ளி* | *- மயானம் (இஸ்லாமியக் கிளை மொழியில் மயானத்தை காட்டுப்பள்ளி என்று கூறும் வழக்கு உண்டு)* |

## வினாக்கள்

1. நாட்டார் பாடல்கள் வேறு எப்பெயர்களால் அழைக்கப்படுகின்றன?
2. ஏர்ப்பாடல் எல்லோரும் வாழ்வதற்கு எவற்றையெல்லாம் கடவுளிடம் வேண்டுவதாக அமைந்துள்ளது?
3. நாற்று நடுகைப் பாடலில் அரிவி வெட்டும் இளந்தாரிமாரை உவமிக்கும் இரு உவமைகளை எடுத்துக்காட்டுக.
4. காதல் பாடலில் தலைவன் தன் தலைவியை என்னென்ன பெயர்கள் குறிப்பிட்டு அழைக்கிறான்?
5. காதல் பாடலில் தலைவன் தலைவியை அடைவதாக எவ்வாறு உறுதி கூறுகிறான்?
6. காதலர்கள் எச்சந்தர்ப்பங்களில் இப்பாடல்களைப் பாடுவார்கள்?
7. நாட்டார் பாடல்கள் என நாம் எவற்றைக் குறிப்பிடுகின்றோம்?

## குழுச் செயற்பாடு

1. இப்பாடலை குழுவாக பாடுவதற்கான சந்தர்ப்பத்தை மாணவர்களுக்கு வழங்க வேண்டும்.
2. தமது பிரதேசத்திலிருந்து இவ்வாறான பாடல்களை தேடிப்பெற்று தொகுப்பதற்கு வழிப்படுத்துக.
3. இப்பாடலில் நீர் சுவைத்த பகுதியை எடுத்துக்காட்டுக.